2.DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

STC. No.2282/2019

PROSECUTION WITNESS L.W.11/P.W.7

| | | | |
|---|---|---|---|
| Name | : Dr.கோமதி | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Husband’s Name | : கிருஷ்ணகுமார் | | |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

( எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு - 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 08.10.2024.

முதல் விசாரணை

1) நான் தற்போது அரசு தலைமை மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன்.

2) கடந்த 05.02.2018 ம் தேதி, பகல் 3.10 மணியளவில் அவசர சிகிச்சை பிரிவில் நான் பணியில் இருந்தபோது, ஈரோடு லக்காபுரம் நொச்சிக்காட்டு வலசை சேர்ந்த நல்லதம்பி என்பவரின் மகன் கனகராஜ் மருத்துவமனைக்கு வந்தார். அவரை அவரது இல்லத்தில் 1.30 மணியளவில் அடையாளம் தெரிந்த இரு நபர்கள் குச்சியால் தாக்கியதாக கூறினார். அவருக்கு விபத்து பதிவேடு பதிவு செய்து அவர் முழு சுய நினைவுடன் இருந்தார். கீழ்கண்ட காயங்கள் இருந்தது. 1. இடது கையில் 4 செமீ நீளம் சிராய்ப்பு காயம் 2. இடது கையில் 1 X 1.5 செமீ அளவிலான கன்றிய காயம் 3. வலது கையில் 2 X 1 செமீ அளவிலான சிராய்ப்பு காயம் 4. வலது புஜத்தில் 8 X 4 செமீ அளவிலான கன்றிய காயம் 5. முதுகின் வலது புறத்தில் 8 X 4 செமீ அளவிலான கன்றிய காயம் 6. வலது தொடையில் 2 X8 செமீ அளவிலான கன்றிய காயம் இருந்தது. அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து உள்நோயாளியாக அனுமதித்தேன். அவர் 5 ம் தேதி முதல் 7 ம் தேதி வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்று மருத்துவர் அனுமதியின்றி மருத்துவமனையிலிருந்து வெளியே சென்று விட்டார். அதனால் காயத்தின் இறுதி தன்மை குறித்து சான்றளிக்கவில்லை. **(05.02.2018 ம் தேதியிட்ட கனராஜின் விபத்து பதிவேடு அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

அதே நாள் பகல் 3.35 மணியளவில் பெருந்துறை பிச்சாண்டம் பாளையம் சதீஷ் என்பவரது மனைவி காஞ்சனா மருத்துவமனைக்கு வந்தார். அவரை

கொல்லம்பாளையத்தை சேர்ந்த அவரது உறவினர் வீட்டிற்கு அருகே அன்று பகல் 2.10 மணியளவில் அடையாளம் தெரிந்த 3 நபர்கள் குச்சி மற்றும் காலால் தாக்கியதாக கூறினார். அவருக்கு விபத்து பதிவேடு பதிவு செய்து அவரை பரிசோதித்தேன். அவர் சுயநினைவுடன் இருந்தார். கீழ்கண்ட காயங்கள் அவருக்கு இருந்தது. 1. வலது புஜத்தில் நீளமான சிராய்ப்பு காயங்கள் இருந்தது. 2. வலது கண்ணைச் சுற்றி சிறு சிராய்ப்பு காயங்கள் இருந்தது. 3. கர்ப்பப்பை வாயில் இருந்து உதிரப்போக்கு இருந்ததாக கூறினார். 4. அடிவயிற்றில் வலி இருந்ததாக கூறினார். அவருக்கு முதலுதவி அளித்து உள்நோயாளியாக அனுமதித்தேன். அவர் மருத்துவர் அனுமதியின்றி அன்று இரவு 8.00 மணி அளவில் மருத்துவமனையிலிருந்து வெளியே சென்று விட்டார். அதனால் காயத்தின் இறுதி தன்மை குறித்து சான்றளிக்கவில்லை. **(05.02.2018 தேதியிட்ட காஞ்சனாவின் விபத்து பதிவேடு அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) காயம்பட்டவர் என்னிடம் 2 நபர்கள் தாக்கியதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். பெயர் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். இந்த காயங்கள் கரடு முரடான பாதையில் தவறி விழுந்தால் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் சரிதான். விஷபூச்சி கடித்தால் கன்றிய காயம் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் உண்டு.

2) காஞ்சனாவுக்கு ஏற்பட்ட காயத்தின் வயது குறித்து நான் சான்றளிக்கவில்லை என்றால் சரிதான். புதிய இரத்தப்போக்கு இருந்ததாக நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காயம் பழைய காயமாக இருந்தால் அதன் நிறம் மாறிவிடும் என்றால் சரிதான். காயத்தின் நிறம் குறித்து நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சிராய்ப்பு காயங்கள் கரடு முரடான பாதையில் தவறி விழுந்தால் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் சரிதான். கர்ப்பப்பை இரத்தப்போக்கு மற்றும் அடிவயிற்று வலி வழக்கமாக ஒரு வயது வந்த பெண்ணிற்கு மாதம் மாதம் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் உண்டு.